**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**OS. NO: 5329/2023**

**Deposition of: PW1** **DATE: 01.07.2025**

**NAME: M.Rajkumar**

**AGE: 56 Years**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்:**

**1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கும், வழக்கை நடத்துவதற்கும், சாட்சியம் அளிப்பதற்கும் வாதி நிறுவனம் எனக்கு அதிகாரம் அளித்துள்ளதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.11 தீர்மானம் தாக்கல் செய்துள்ளேன். அதில் எனது கையெழுத்து உள்ளதா என்றால் எனது கையெழுத்து இல்லை. நான் வாதி நிறுவனத்தில் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன் என்ற விவரம் வா.சா.ஆ.11 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. 1ம் பிரதிவாதியை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியுமா அல்லது கம்பெனி மூலமாக தெரியுமா என்றால் கம்பெனி மூலமாக தெரியும். 1ம் பிரதிவாதி எந்த தேதியில் பணியில் சேர்ந்தார் என்ற விவரம் எனக்கு தற்போது ஞாபகமில்லை, ஆவணங்களில் உள்ளது. 1ம் பிரதிவாதி இரண்டு ஆண்டுகளாக வாதி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். 1ம் பிரதிவாதி பணிபுரிந்த காலத்தில் அவருக்கு ஊதிய உயர்வோ அல்லது ஊதிய குறைப்போ வழங்கப்பட்டதா என்றால் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. வாதி நிறுவனம் தொடங்கப்பட்ட நான்கு ஆண்டுகளாகிறது. முதல் ஆண்டு முடிந்த பிறகு 1ம் பிரதிவாதிக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. எந்த ratio அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது என்றால்

மற்ற ஒரு வருடம் பணி நிறைவடைந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது போல் 1ம் பிரதிவாதிக்கும் வழங்கப்பட்டது. வாதி நிறுவனம் Export and Import and Logistic Services செய்து வருகிறது. வாதி நிறுவனம் எந்தவிதமான பொருட்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்து வருகின்றது என்றால் எந்த பொருளாக இருந்தாலும் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்வோம். வழக்குரையில் Hubload SLS Services Private Limited is a part of M/s.Skyways Group, a companies registered under companies having office at New Delhi என்று குறிப்பிடப்பட்டுள்ள சங்கதி முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரி தான். வாதி நிறுவனத்தின் பொது மேலாளர் என்ற முறையில் எனக்கும், மற்ற தொழிலாளிகளுக்கும் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் அதை தீர்வு காண்பதற்கு எங்கள் நிறுவனத்தில் customer service உள்ளதா என்றால் customer service அந்த பிரச்சனையை தீர்வு காணாது, Human Resource பிரிவு தான் அதுபோன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணும். 1ம் பிரதிவாதி என்னிடம் வேலைக்கு ஏற்ற ஊதிய உயர்வு தர வேண்டும் என்று வாதி நிறுவன மேலாளர் என்ற முறையில் என்னிடம் கோரிக்கை வைத்தார் என்றும், அது பற்றி நான் எந்த தகவலும் சொல்லவில்லை என்றும் சொன்னால் என் நினைவிற்கு தெரிந்து 1ம் பிரதிவாதி அதுபோன்று என்னிடம் சொல்லவில்லை. எங்கள் நிறுவனத்தில் தொழிலாளிகள் பணியில் சேரும்போது அவர்களுக்கு laptop, Company ID card, தேவைப்பட்டால் Pendrive, Net connection வழங்குவோம். எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு Target Fix செய்துள்ளோமா என்றால் Sales Employee க்கு அதுபோல் Target Fix செய்துள்ளோம். 1ம் பிரதிவாதி எங்கள் நிறுவனத்தின் Customer service பிரிவில் வேலை செய்தார். எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும்

mail ID என்பது எங்கள் நிறுவனம் உருவாக்கி ஊழியர்களுக்கு வழங்கும். ஊழியர்களின் mail ID க்கான password தனிப்பட்ட முறையில் இருக்குமா அல்லது பொதுவாக இருக்குமா என்றால் தனிப்பட்ட முறையில் இருக்கும். ஆனால் Admin டம் அந்த control இருக்கும்.

**(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**